FUTUR EN TOUS GENRES
Nouvelles perspectives pour filles et garçons

## Futur en tous genres [பிள்ளைகள்தான் எதிர்காலம்] – முக்கிய தகவல்

பிள்ளைகள்தான் எதிர்காலம் என்ற திட்டத்தின் இலக்கு, வழமைக்கு மாறான தொழில் வாய்ப்புகளைப் பாடசாலைப் பிள்ளைகள் கண்டு கொள்ள விரிவான வகையில் உதவுவது ஆகும். இந்த நிகழ்வுக்கு நூற்றுக் கணக்கான நிறுவனங்கள், அமைப்புகள், தொழில் கல்விக் கூடங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள் தம் கதவுகளைத் திறந்து சுவிற்சலாந்து முழுவதும் பிள்ளைகளை வரவேற்கின்றன. இளம்பெண்ணோ பையனோ ஆண்டு 8 இலிருந்து ஆண்டு 10 வரையாக ஹார்மோஸ் உடன்படிக்கையின்படி (மாதிரி சுவிஸ் பாடசாலைத் திட்டம்) மாநிலம் Bernல், ஆண்டு 10ல் ஹார்மோஸ் மாநிலம் Neuchatelல், ஆண்டு 9 ஹார்மோஸ் Valaisல், ஆண்டு 8 இலிருந்து 11 வரை ஹார்மோஸ் Fribourgல் அத்துடன் ஆண்டு 8 Geneva ஆகியவற்றில் இருந்து ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது எதிர்பால் குடும்ப நண்பர் ஒருவரை தமது வியாபாரத் தலத்திலோ அல்லது ஆய்வுத் தொழில் பட்டறை ஒன்றிலோ பங்குபற்ற அழைக்கப்படுவார்கள். மாறும் தொலை நோக்குத் திட்டம் எனும் வழக்கில் இல்லாத தொழில்களை இனம் காண்பது, வாழ்வுப் பாதை தொழில் முகவரிடமிருந்து வேற்றுமை மாறுபாட்டில் அனுபவம் பெறுவது இதன் குறிக்கோளாகும்.

உங்களுடைய பையனோ அல்லது இளம்பெண்ணோ இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுதியாக உள்ளனரா? அப்படியானால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவருக்கோ அவளுக்கோ எவ்வாறான வாய்ப்புகள் உள்ளன என்பதை அறிந்து கொள்ளுங்கள்:

1. **அடிப்படை நிகழ்ச்சி நிரல்: இளம்பெண்ணோ பையனோ ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது குடும்ப நண்பரை வேலைக்கு அழைத்துச் செல்லல்**

எதிர்-பால் பங்கு பற்றல் என்பது அடிப்படை நிகழ்ச்சி நிரலில் முக்கியமானது. இருப்பினும், பல மாற்று வழி முறைகள் உள்ளன.

- இளம்பெண்கள் தந்தையையும், பையன்கள் தாயையும் அழைத்துச் செல்லலாம் (அல்லது குடும்ப உறுப்பினரை),
- இளம்பெண்கள் மரபுசார்- ஆண்களால் மேற்கொள்ளப்படும் தொழில் துறைக்கு ஒருநபரை அழைத்துச் செல்லலாம். பையன்கள் மரபுசார்- பெண்களால் மேற்கொள்ளப்படும் தொழில் துறைக்கு ஒருநபரை அழைத்துச் செல்லலாம்.

2. **தொழில் பட்டறை ஆய்வு: இளம்பெண்ணோ பையனோ தொழில் பயிற்சி பட்டறையைத் தெரிவு செய்யலாம்.**

பெரும் எண்ணிக்கையான நிறுவனங்கள், அமைப்புகள், தொழில் கல்விக் கூடங்கள், மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள் குறிப்பிட்ட பட்டறைகளை இளம் பெண்களுக்கும் பையன்களுக்கும் ஒழுங்கு செய்ய உள்ளன. உங்கள் பிள்ளையும் இதில் பங்கு கொள்ள வேண்டுமா? தயவு செய்து பின்வரும் வழி முறைகளைப் பின்பற்றுங்கள்.

- உங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் www.futurentousgenres.ch எனும் இணையத்தளத்தில் காணலாம் (பிரெஞ்சு, ஜேர்மன் மற்றும் இத்தாலியம்), கோவையின் தலையங்கத்தின் கீழ் 'filles' 'இளம்பெண்கள்' அல்லது 'garçons' 'பையன்கள்' என்பதைத் தெரிவுசெய்த பின்னர் நீங்கள் எந்த 'மாநிலத்தில்' வசிக்கின்றீர்கள் எனக் குறிப்பிட வேண்டும்.

### பிரயோசனமான தகவல்கள்

**உங்கள் வேலை இடத்தில்**

“பிள்ளைகள்தான் எதிர்காலம்“ நிகழ்வின் போது உங்கள் பிள்ளை, உங்கள் செயற்பாடுகள் தொடர்பாகக் கேள்விகளைக் கேட்க முடியுமா என உங்கள் தொழில் வழங்குனரிடம் கேளுங்கள். அதை உங்கள் நண்பர்கள், நிர்வாகம், மனித வளத்துறைக்கு அறிவிக்க மறவாதீர்கள். பல நிறுவனங்கள்/ அமைப்புகள் இதற்காகப் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளைத் திட்டமிட்டுள்ளன.

**பாடசாலையில்**

உங்களோடு உங்கள் பிள்ளை தொழில் பட்டறையில் கலந்து கொள்ள விரும்பினால் நீங்கள் அனுமதிப் படிவத்தை (permission slip) (பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலியன் இல்) பூர்த்தி செய்து ஆசிரியரிடம் எடுத்துச் செல்ல வேண்டும். உங்கள் பிள்ளையின் வகுப்பு இந்த நிகழ்வில் பங்குபெறாது விட்டால் அவரோ அல்லது அவளோ வகுப்பில் இடம்பெறும் விடயதான நிகழ்வுகளில் கலந்து கொள்ளலாம்.

**“பிள்ளைகள்தான் எதிர்காலம்“ நாளுக்குத் தயார் படுத்தல்**

உங்களை “பிள்ளைகள்தான் எதிர்காலம்“ நிகழ்வுக்குத் தயார் படுத்திக் கொள்ளுங்கள்: எந்த தொழில் பற்றி உங்கள் பிள்ளை மேலும் அறிய விரும்புகிறது? வேறொன்றையும் விட, வித்தியாசமான ஆய்வுப் பட்டறைகள் குறித்து ஒன்றுசேர்ந்து விவாதிப்பதே பலனைத் தரும். இந்த நாளிற்காக உங்களைத் தயார்படுத்த உதவும் சரி பிழை பார்க்கும் படிவம் இங்கே (here) தயாராக உள்ளது (பிரெஞ்சில்)

**நேர்முகத் தேர்வு**

உங்கள் நண்பரிடம் அதாவது அவரிடம் அல்லது அவளிடம் உங்கள் பிள்ளை கேள்விகள் கேட்டால் அதற்குப் பதிலளிக்கத் தயாராக உள்ளனரா எனக் கேளுங்கள். பரந்துபட்ட தொழில் வாய்ப்புகள் நிறைந்துள்ளதை இளம்பெண்களுக்கும் பையன்களுக்கும் அறிய வைப்பதே இந்த நாளின் குறிக்கோளாகும். ஆகவே நீங்கள் இதன்போது கவனமாக உங்கள் பிள்ளைக்கு பரிச்சயம் இல்லாத அல்லது அறிந்திருக்காத துறையில் தொழில்செய்யும் ஒரு நபரைத் தெரிவு செய்ய வேண்டும். நேர்முகத் தேர்வு மாதிரி (interview model) (பிரெஞ்சில்) தரவிறக்கம் செய்ய முடியும்.

**மதிப்பிடல் கேள்விக்கொத்து**

“பிள்ளைகள்தான் எதிர்காலம்“ நாளின் நிறைவில், நிகழ்வு பற்றிய மதிப்பிடல் கேள்விக்கொத்தைப் (evaluation questionnaire) பூர்த்தி செய்யுமாறு உங்கள் பிள்ளைகளிடம் கேட்பதுடன், அதைப் “பிள்ளைகள்தான் எதிர்காலம்“ (Futur en tous genres) (பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலியன் இல்) அமைப்பாளர்களுக்கு அனுப்பி வையுங்கள்.